★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 29உ வியாழன் (13—9—56) ★ ★ வெளியூர்: ஆவணி 30உ வெள்ளி (14—9—56) [இதழ் 81

## பண்டித நேருவைச் சந்திக்க நாகர் தூதுக்குழு டில்லி புறப்பாடு

★

அண்மையில் பண்டித நேரு அறிவித்திருந்ததற்குஒப்ப, நாகர்களின் தூதுக்குழு ஒன்று அவரைச் சந்திப்பதற்காக டெல்லிக்குப் புறப்பட்டுள்ளதாம்.

ஆறு பேரடங்கிய இந்தக் குழுவினர் நாகர் தேசியக் கவுன்சிலைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று தெரியவருகிறது.

### பாரத புத்திரர்கள் ஆட்சியில்:

# பல இலட்சம் வரிப்பணம் பாழாகும் வேதனை

## தற்காப்பிலாகா ஊழல்களின் பிறப்பிடமாகிறது

### காங்கிரசார் தோளில் சுமக்கும் ஒழுங்கீனங்கள் அதிகரிக்கின்றன

### மக்கள் சபைக் குழு அம்பலப்படுத்தும் விவரங்கள்

புதுடில்லி, செப். 12—

காங்கிரசாட்சியில், நாற்றமடிக்கும் ஊழல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவ்வப்போது வரும் தணிக்கைக் குழு அறிக்கைகள் கூறுகின்றன. இவர்களது திறமைக் குறைவான நிர்வாகத்தால் மக்களின் வரிப் பணம், இலட்சம் இலட்சமாகப் பாழடிக்கப்படுகிற கொடுமை இன்னும் நின்றபாடில்லை.

டில்லியின் தற்காப்பு இலாகா, ஊழல்களுக்குப் பிறப்பிடமாகியிருக்கிறது என்பதை மக்கள் சபை பொதுக் கணக்குக் குழுவினரின் அறிக்கை மீண்டும் உறுதி செய்திருக்கிறது.

தேவைப்பட்ட ஒரே வகையான சாமான்களுக்கு தற்காப்பிலாகா, 1951-ம் ஆண்டில், இங்கிலாந்தில் உள்ள ஒரு நிறுவனத்திடமும், போர்த்தளவாடத் தொழிற்சாலைகளின் தலைமை அதிகாரியிடத்திலும் கோரிக்கை தெரிவித்ததாம்.

இந்தியப் போர்த்தளவாட உற்பத்தி அதிகாரியிடம் தரப்பட்ட கோரிக்கையை ரத்து செய்யாததால், மக்களின் வரிப்பணம் ரூ 15·56 இலட்சம் பாழாயிற்றாம்.

மேலும், இந்த அழிவு போதாதென்று, கிடைத்த தளவாடங்களை சோதனை செய்து பார்ப்பதற்காக மட்டும் ரூ. 1·07 இலட்சம் செலவிடப்பட்டதாம்.

இதுமட்டுமா? இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட சாமான்கள் இவர்கள் விரும்பிய ரகத்தினவை அல்ல என்றும் அதனால், ரூ. 25·53 இலட்சம் பாழானது என்றும் குழு தெரிவிக்கிறது.

இந்த மொத்தத் தொகையும் சர்க்காருக்கு ஏற்பட்ட பெரும் நஷ்டம் என்று குழு அறிவிக்கிறது. காரணம் இங்கிலாந்திலிருந்து வாங்கப்பட்ட சாமான்கள் அனைத்தும், 10 ஆண்டுகளுக்கு முன் தயாரானவை என்றும் அவை இப்போது கிஞ்சிற்றும் உபயோகப்படுவதற்கில்லை என்றும் குழு கூறியிருக்கிறது.

இதுபோலவே வேறுவகைத் தளவாடங்கள் தேவைப்பட்டபோது, ஏககாலத்தில் அவைகளை இந்தியத் தளவாட உற்பத்தி அதிகாரியிடமிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் வாங்கியதினால் ரூ. 15·08 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது என்றும் குழு தகவல் தந்திருக்கிறது.

மற்றும் சில ஊழல்களையும் குழு அம்பலப்படுத்தத் தவறவில்லை.

இந்தியாவில் உள்ள ஒரு ஜீப்கார் வியாபாரியிடமிருந்து பல ஜீப்கார்கள் வாங்கினராம் தற்காப்பிலாகாவினர்.

இதற்கான ஒப்பந்தம் செய்யும் போது விற்பனை வரியையார் தருவது என்று பேசிக்கொள்ளவில்லையாம்.

சட்டப்படி, சர்க்காருக்கு வரியைச் செலுத்தவேண்டியது ஜீப்கார்களை விற்றவர்தான் என்றும், ஒப்பந்தத்தில், வேறுவிதமாகக் குறிப்பிட்டிருந்தாலன்றி வாங்கியவர் தரவேண்டியதில்லை என்றும் சர்க்கார் வழக்கறிஞர் கூறியிருந்தாராம். ஆனாலும், ஜீப்கார் விற்றவருக்கு எந்தவகையிலாயினும் நஷ்டமேற்பட்டதா என்பதைக்கூடக் கேட்டறிந்து கொள்ளாமல், வியாபாரிக்கு விற்பனைவரி செலுத்துவதற்காக தற்காப்பு இலாகாவினர் ரூ. 10 இலட்சத்தை அள்ளிக்கொடுத்தனராம். இதற்கு எந்தவித நியாயமும் கிடையாது என குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

மேலும் தற்காப்பு இலாகா நிர்வாகத்தில் உள்ள ஊழல்களையும், தளவாட உற்பத்திப் பிரிவில் தாண்டவமாடும் ஒழுங்கீனங்களையும் வரிசைப்படுத்தியுள்ள மக்கள் சபைக் குழுவினர், தற்காப்பு இலாகாவின் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம் என்றும், தொடர்ந்து மக்களின் வரிப் பணம் பாழாகாமலிருக்க, நிர்வாக முறை திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும் இடித்துரைத்திருக்கின்றனர்.

## வடநாட்டில் தொழில் திட்டங்கள்

### மூலதனச் செலவு அதிகரிக்கிறது

சர்க்கார் ஆரம்பிக்கவிருக்கும் மூன்று உருக்கு ஆலைகளின் மூலதனத் தொகை 60 கோடி ரூபாயாகவும், கனரக இயந்திரச் சாலைக்கு 100 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்படுமென நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்தார்.

### மீண்டும் தூதுவர் பதவி

பாரிசில் இந்தியாவின் தூதுவராக சர்தார் கே. எம். பணிக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்; தற்போது பதவி வகிக்கும் ஹர்தித் சிங் மாலிக் இந்தியாவில் கவர்னராக நியமிக்கப்படுவார் எனக் கூறப்படுகிறது.

# எகிப்தை மிரட்டுகிறார் ஈடன்

## கால்வாய் உபயோகிப்போர் சங்கம் அமைக்கப்படுமாம்

### அதற்கு எகிப்து ஒத்துழைப்புத் தரவேண்டுமாம்

லண்டன், செப். 12—

சூயஸ் பற்றிய டல்லஸ் திட்டத்தை எகிப்தியத் தலைவரான நாசர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதில் மென்சீஸ் குழுவினர் தோல்வி கண்டதற்குப் பிறகு, அடுத்த நடவடிக்கை என்ன என்று உலகம் எழுப்பிய கேள்விக்கு பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் பதில் தந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் மக்கள் சபையில் பேசிய அவர், எகிப்தினை அச்சுறுத்துகிற வகையில் பேசியிருப்பது, எவருக்கும் ஆச்சரியத்தைத் தருவதற்கில்லை.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள், சேர்ந்து 'கால்வாய் உபயோகிப்போர் சங்கம்' ஒன்றை அமைப்பதாகவும், அதில் கால்வாயை உபயோகிப்பவர் அனைவரும் பங்கு பெறலாம் என்றும், அந்தச் சங்கம், சூயசில் போக்குவரத்துப் பொறுப்பை மேற்கொள்ளும் என்றும் பிரதமர் ஈடன் மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

இந்தச் சங்கத்துடன் ஒத்துழைக்குமாறு எகிப்து கேட்கப்படுமென்றும், ஒத்துழைக்க மறுத்தால், சம்பந்தப்பட்ட நாடுகள், தங்களுக்குப் பிடித்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் எகிப்தை மிரட்டியிருக்கிறார் ஈடன்.

கால்வாய் வழியாக எவ்வளவு அதிகபட்சமான போக்குவரத்து நடைபெற முடியுமோ அவ்வளவும் நடைபெறுவதற்கு, ஒத்துழைக்குமாறு எகிப்திய அதிகாரிகள் சங்கத்தவரால் கோரப்படுவர்.

"எகிப்து வழங்கும் ஒத்துழைப்புக்கும் வசதிக்கும் உபயோகிப்போர் சங்கம் தகுந்த பணம் தரும் ஆனால்கப்பல்போக்குவரத்துக்கான கட்டணம் எகிப்திய அதிகாரிகளிடம் தரப்பட மாட்டாது. மாறாக' கால்வாய் உபயோகிப்போர் சங்கத்திடம்தான் தரப்படும்"

என்று தனது புதிய திட்டத்திற்கு ஈடன் விளக்கம் தந்தாராம்.

# நெய்வேலிப் பொற்குவியல் 57 ஆண்டுகளுக்கு நிலக்கரி தரும்

## இனியும் டில்லி சாக்குப்போக்கு கூறமுடியாது

புதுடில்லி, செப். 11—

20 கோடி டன் பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் புதைந்து கிடப்பதாகவும், ஆண்டொன்றுக்கு 35 இலட்சம் டன் வீதம் தோண்டினால் 57 ஆண்டுகளுக்கு வெட்டி எடுத்துக்கொண்டே இருக்க முடியும் என்றும் நெய்வேலியில் ஆராய்ச்சி நடத்திய தொழில் நிபுணர்களான பொவல் டப்ரின் நிறுவனத்தார் தகவல் தந்திருக்கின்றனர்.

இந்த நிலக்கரியைச் சிக்கனமான செலவிலேயே தோண்டி எடுக்க முடியும் என்று பரிசோதனைகள் நிரூபித்திருக்கின்றன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நிலக்கரிப் படிவங்களுக்கடியில் உள்ள நீரோட்டத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமே எனவும், அதன் மூலம் சுரங்க வேலை, ஆபத்து இன்றி நடைபெற முடியும் என்றும் அந்த நிபுணர்கள் நற்சான்று அளித்திருக்கின்றனர்.

இனியும் எந்தவிதமான சாக்குப் போக்குக் கூறியும் டில்லிப் பெரிய மனிதர்கள் நெய்வேலித் திட்டத்தை நடைமுறைக்கு வராமல் செய்யமுடியாதவாறு இந்த நிபுணர்களின் அறிக்கை அமைந்திருக்கிறது.

# ஓடிவரும் அகதிகள் எண்ணிக்கை

## உயர்ந்துகொண்டே போவதாகக் கவலையின்றிக் கூறுகிறார் மந்திரி

புதுடில்லி, செப். 12—

1954-ல் மாதம் ஒன்றுக்கு 10,000 ஆகவும், 1955-ல் 20,000 ஆகவும் இருந்த கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை, இப்போது 1956-ல் முதல் ஆறு மாதங்களில் மாதம் ஒன்றுக்கு 30,000 ஆக உயர்ந்துவிட்டதாக மக்கள் சபையில் அகதி இலாகா மந்திரி மேகர்சந்த் கன்னா தெரிவித்திருக்கிறார்.

மேற்குப் பாகிஸ்தானில் ஏற்கனவே 30 இலட்சம் அகதிகளுக்கு மேல் குடியேற்றப்பட்டுவிட்டதால் இனி வருவோருக்கு அங்கே வாழ்வு தருவது சாத்தியமில்லை எனவும், எனவே அவர்களை வேறு வெளி மாநிலங்களுக்கு அழைத்துச் செல்ல டில்லி உதவ வேண்டுமெனவும், மே. வ. சர்க்கார் கோருவதாக மந்திரி தெரிவித்திருக்கிறார்.

# மைசூர் முதன் மந்திரி பதவி

## மீண்டும் மாறுதல் ஏற்படும்?

பெங்களூர், செப். 12—

புதிய கர்நாடக மாநிலம், மைசூர் என்ற பெயருடன் வரும் நவம்பர் முதல் உதயமாகும்போது, இப்போது தான் கடந்த திங்களில் முதன் மந்திரியாகியுள்ள கதிலால் மஞ்சப்பாவே தொடர்ந்து பதவியில் நீடிப்பார் என்று சொல்வதற்கு இல்லையாம்.

வரும் அக்டோபர் இரண்டாவது கிழமையில், புதிய மைசூரின் சட்டசபைப் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் ஒன்று மேலிடத்தவரால் நடத்தப்படும் என்றும், அம்போது சட்டசபைக் காங்கிரசு கட்சிக்கு புதிய தலைவர் தேர்தல் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

ஐக்கிய கர்நாடகத்திற்காகப் பல காலம் பாடுபட்டவர் என்று கூறப்படும் மைசூர் பிரதேச காங்கிரசின் முன்னாள் தலைவரான எஸ். நிஜலிங்கப்பா எம். பி, இப்போதைய மைசூர் காங்கிரஸ் கட்சித் தலைவர் சென்னையா, இப்போது முதன் மந்திரியாயிருக்கும் கதிலால் மஞ்சப்பா ஆகியோரின் பெயர்கள், புதிய தலைவர் பதவிக்காக அடிபடுகின்றனவாம்.

இந்தப் புதிய தலைவர்கூட வரப்போகும் பொதுத் தேர்தல்வரை தான் பதவியில் நீடிக்க முடியும் என்பதும் தெரிந்ததே.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13-9-'56 வியாழன்

# ஐந்து இலட்சம் தாரீர்!

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கடந்த ஞாயிறன்று சென்னையில் கூடிய கழகத்தின் தலைமைச் செயற்குழுவினர் மேற்கொண்ட முடிவுகளைக் கண்ணுற்று, அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பர்.

'பொதுத் தேர்தல் செலவுகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிதி திரட்டவும், அதற்கான வழி வகைகளை வகுத்துக் கொள்ளவும், பொதுச்செயலாளருக்கு இச்செயற் குழு முழு அதிகாரம் அளிக்கிறது' என்பது, செயற்குழுவினரின் மிக முக்கியமான தீர்மானங்களுள் ஒன்றாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் வரப்போகும் பொதுத்தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவு, கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றபோது மேற்கொள்ளப்பட்டது. இந்த முடிவை மேற்கொள்ளுவதற்கு கழகம், வரலாறு காணாததோர் விரிவான சனநாயக முறையை மேற்கொண்டதை யாரும் அதற்குள் மறந்திருக்க முடியாது.

தாயகத்தின் பல்வேறு பகுதிகளின் பிரதிநிதிகளாக மாநாட்டில் கலந்து கொண்ட இலட்சக் கணக்கான மக்களின் பெருவாரியான வாக்குகளைக் கொண்டே கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவை மேற்கொண்டது.

தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவை கழகம் மேற்கொண்டதினால், தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டத்து அரசியலிலும் மகத்தான திருப்பங்கள் நிகழ்ந்து வருவதை நாம் காண்கிறோம்.

நாம் தேர்தலில் ஈடுபடப் போகிறோம் என்ற முடிவைக் கேட்டவுடன் ஆளும் கட்சியினர் இடி விழுந்த நாகம் போல் நடுநடுங்கினர். இன்று நாம், ஆளும் கட்சியினருக்கு மட்டுமின்றி இதர மாற்றுக் கட்சிகள் சிலவுக்கும் பிரதான எதிரிகளாகக் காட்சி தருகிறோம்.

மிக மட்டரகமான பிற்போக்குவாதிகளெனப்படும் காங்கிரசாருக்கு மட்டுமின்றி, பிறவியிலேயே தாங்கள் முற்போக்குவாதிகள் எனப் பீத்தித் திரியும் சில மாற்றுக் கட்சியினருக்கும்கூட, நாம் தேர்தலில் ஈடுபடுவது என்பது சகித்துக் கொள்ள முடியாத காட்சியாகத் தோன்றுகிறது என்பதை அவர்களது சமீபகாலத்திய போக்குகள் எடுத்தியம்பி வருகின்றன.

காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சியினரும் தேர்தலுக்கான பலமான முஸ்தீபுகளைத் தீவிரமாகச் செய்துவருவதையும் நாம் காண்கிறோம்.

ஆளும் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ் கட்சியினர், வரப்போகும் பொதுத் தேர்தலில் நாட்டு மக்களை அணுகுவதற்குத் தங்களிடத்தில் மக்களைக் கவர்ச்சிக்கக்கூடிய-மக்களுக்கு வாழ்வு தரும் திட்டங்கள், அவற்றைத் திறம்படத் தீட்டி நிறைவேற்றுவதற்கான அறிவாற்றல் இவை இல்லை என்பதை மட்டுமின்றி, கடந்த காலத்தில் நாட்டு மக்களை வாழ்விக்கத் தவறிவிட்டோம்—நாட்டவரின் நலன்களைப் பேணுவதில் அக்கரை சிறிதும் காட்டாமல் பதவி வேட்டைகளிலும் சுயநலக் காரியங்களிலுமே ஈடுபட்டு வந்திருக்கிறோம் என்பதையும், ஆட்சியில் ஊழலும் ஒழுங்கீனமும் தாண்டவமாடின என்பதையும், இன்னும் இவைபோன்றகுறைபாடான-மக்கள் நலனுக்குப் புறம்பான செயல்களால் மக்களின் கடுங்கோபத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்பதையும் உணர்ந்த நிலையில் பணத்தை மட்டுமே தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் போதுமான ஆயுதமாகப் பயன்படுத்துவது என்ற முடிவிலிருக்கின்றனர்.

சனநாயகத்தை பணம் தந்து விலைக்கு வாங்கிவிடலாம் என்ற நப்பாசையால், தங்களின் பண பலத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே அவர்கள் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

மக்கள் தங்கள்மீது கொண்டுள்ள வெறுப்பை—விரோதத்தை—எதிர்ப்பைத் தணிப்பதற்கு பணமே போதும் என்று காங்கிரசார் திட்டவட்டமாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பணத்தைக் குவித்தவண்ணமுள்ளனர். அவர்கள் கூடாரத்தில் புகுந்துவிட்ட 'மேட்டுக்குடி'யினர் — முதலாளிகள்—நிலப்பிரபுக்கள் எல்லாம், காங்கிரசின் நிதிக்குவியலைப் பெரிதாக்கி வருகின்றனர்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் வெற்றி பெற பண பலத்தை நம்பியில்லை என்பதை நாடறியும்.

கழகம் தேர்தலுக்காக வைத்துக்கொண்டிருக்கும் முதலீடு எல்லாம், மக்கள் காட்டிவரும் பேராதரவு — தோழர்களின் தளராத உழைப்பு —உற்சாகம் —ஆர்வம் இவையும், இவற்றை உருவாக்கிய கழகத்தின் கொள்கை கோட்பாடுகளில் பின்னிக்கிடக்கும் நேர்மை, உண்மை இவையும்தான்.

காங்கிரசுக்கு நிதி வழங்குகிற 'கனதனவான்'களைப் போல கழகத்திற்கு நிதி வழங்க எவரும் கிடையாது. இருந்தாலும் அவர்கள் வழங்கும் நிதியை அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, குஷ்டரோகி தரும் வெண்ணெய்க்குச் சமமாகவே கழகம் கருதுகிறது.

மக்களின் நீங்காத பேராதரவை நம்பியே தேர்தலில் ஈடுபடுகிற கழகத்திற்கு, தேர்தல் செலவிற்காக ஐந்து இலட்சம் ரூபாய்வரை தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

செயற்குழுவின் முடிவுப்படி பொதுச்செயலாளர், உசிதமான வழிகளில் மிகமிகக் குறுகிய காலத்திற்குள் இந்தத் தொகையை—நமது நிலையை நினைக்கும்போது நமக்கு இது மிகப் பெரியதொரு தொகை—திரட்டியாக வேண்டும்.

கழகம் தேர்தலில் ஈடுபட வேண்டும் என்று உற்சாகப் படுத்திய மக்களிடமிருந்துதான் காலணா — அரையணாக்களாக இந்தப் பெருந்தொகையைத் திரட்டியாக வேண்டும். நாடெங்கிலுமுள்ள தோழர்கள் உடனடியாக இந்தப் பணியை மேற்கொண்டாக வேண்டும்.

நாம் தேர்தலில் ஈடுபட வேண்டியிருப்பதின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் நாம இங்கு தொடர்ந்து விளக்கியிருக்கிறோம். அதை உணர்ந்து தோழர்கள், வரையாது வழங்கும் வள்ளல்கள் மக்கள்தான் என்பதால் அவர்கள் நம்மீது கொண்டுள்ள அன்பையும், நமக்குக் காட்டும் ஆதரவையும் வெள்ளிக் காசுகளாக வெளிப்படுத்தச் செய்யவேண்டும். தோழர்கள், தீவிரமாகச் செயலாற்றத் தலைப்படுவார்களாக!

# 'இலக்கியம் இன்பம் தருவது மட்டுமல்ல'

## 'எதிர்காலத்திற்கு வழிகாட்டக் கூடியதுமாகும்'

### 'இலக்கிய இன்பம்' பற்றி பொதுச்செயலாளர்

8—9—56-ல், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக சென்னை—கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'இலக்கிய இன்பம்' என்ற தலைப்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய பேருரையின் முதற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

"தலைவன் ஒருவன் வெளியூர் செல்கிறான்—பண்டைத் தமிழகத்தில்தான்! தலைவி, தலைவனைப் பிரிய நேரிடுகிறது என்பதால் வருந்துகிறாள்—கவலை கொள்கிறாள்; தலைவனும் பிரியா விடைபெற்றுச் சென்றுவிடுகிறான்.

"தலைவனைப் பிரிந்த தலைவி ஏங்குகிறாள்; உடன் உள்ள தோழி ஏதேதோ கூறித் தலைவியைத் தேற்ற நினைக்கிறாள்.

"அப்படி அவள் தலைவியைத் தேற்றுவதற்காகக் கற்பனைக் கதை ஒன்று கூறுவதாகக் கவிஞன் கற்பனை செய்கிறான்—

"'தலைவன் பல ஊர்களையும் தாண்டி, மலைப்பாங்கான பகுதிகளையும் தாண்டி காடு ஒன்றை அடைகிறான். வெப்பம் மிகுந்த அந்த நேரத்தில் தலைவன் மிகவும் களைத்துப்போன நிலையில் நீர் அருந்த நினைக்கிறான்; அருகில் இருந்த குட்டை ஒன்றில் நீர் அருந்தச் செல்லுகிறான்; அங்கே ஒரு ஆண் யானையும் பெண் யானையும் நீர் அருந்த வருகின்றன; ஆனால், அந்தக் குட்டையில் ஒரு யானைக்கு மட்டுமே போதுமான நீர் இருக்கிறது; இதையறிந்த ஆண் யானை, பெண் யானையை நீர் அருந்துமாறு கூறுகிறது; பெண் யானையோ, ஆண் யானையையும் நீர் அருந்தவேண்டும் என்று சொல்லுகிறது; ஆண் யானையும், தான் அருந்தினால்தான் பெண் யானை நீர் அருந்தும் என்று கருதி, நீர் அருந்துவதுபோல் பாவனை செய்கிறது; பெண் யானை, ஆண் யானை நீர் அருந்துவதாக நினைத்துக்கொண்டு தண்ணீரைக் குடித்து விடுகிறது.

'இந்தக்காட்சியைக் கண்டபின்னும் தலைவன் மேலால் செல்ல மாட்டான்; உன்னை நோக்கி ஓடி வந்துவிடுவான்', என்று ஏங்கித் தவிக்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகிறாள்.

'இது அகநானூற்றில் காணப்படும் ஒரு கவிதை; இது போன்றே வேறொரு கவிதையும் உண்டு" என்று கூறிய பொதுச்செயலாளர் அவர்கள், அந்தக் கவிதை கூறும் கற்பனைக் கதையையும் விளக்கினார்கள்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:—

"அழகி ஒருத்தி வீட்டைவிட்டுப் புறப்பட்டு, தண்ணீர் கொண்டு வரக் குடமேந்திச் செல்கிறாள். அவளைப் பார்த்துவிட்ட இளைஞன் ஒருவன், அவளது எழிலுருவைக் கண்டு மயங்கிய நிலையில் அவளைப் பின் தொடர்கிறான்; அவளிடம் எப்படியேனும் பேசிவிட வேண்டுமென ஏதேதோ செய்து பார்க்கிறான்; எந்த முயற்சியும் பலிக்கவில்லை. பெண் இவனை ஏறெடுத்துப் பாராமலேயே போய் விடுகிறாள். ஏக்கமுற்ற நிலையில் அந்த வாலிபன் கருதுகிறான்—'அழகியாகப் பிறந்த உன்னைக் குறைகூறியும் பயனில்லை; உன்னைப் பெற்றெடுத்து, இப்படி வெளியே போய்வர உன்னை அனுமதித்தார்களே அவர்களைக் குற்றம் கூறக்கூடாது; இந்த நாட்டு அரசனைத்தான் கூறவேண்டும்; ஏனெனில், மதம் பிடித்த யானையை ஊருக்கு நடுவே கொண்டுவரும் போது, 'மதம் பிடித்த யானை வருகிறது; ஊர்மக்களே கவனமாயிருங்கள்', என்று முரசறைந்து பறைசாற்றி யானையை வெளியில் அனுப்புகிற அரசன், 'இன்னார் வீட்டில் உள்ள அழகி, இன்று இத்தனை நேரத்திற்கு வெளியே புறப்படுகிறாள்; எனவே, பலவீனமான இளைஞர்கள் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டாம் என்று ஏன் முரசறைந்திருக்கக் கூடாது? குற்றம் அரசனுடையதுதான்' என்று அந்த வாலிபன் கருதுகிறானாம்! இதுவும் தமிழ் இலக்கியத்தினுள் கிடைப்பதுதான்!

"காதல் என்பது என்ன என்பதை, 'இன்னதுதான்—இப்படிப்பட்டதுதான்' என்று எவரும் திட்டமாக விளக்கிக் கூறிடமுடிவதில்லை.

"வள்ளுவர் ஒரு உவமையைக் காட்டி. 'அதுபோல' என்று காதல் இன்பத்தை விளக்கிடக் காண்கிறோம்.

"'தன் உழைப்பால் பொருள் தேடி, தானே பலவும் தயாரித்து, தனது உற்றார் உறவினருக்கு விருந்தளிக்கும்போது, விருந்துண்டவர்கள் களிப்படைகிறார்களல்லவா? அந்தக் களிப்பைக் காணும்போது, விருந்தளிப்பவன் உள்ளத்தில் எழுகிற இன்ப உணர்ச்சியிருக்கிறதே அதுபோன்றது காதல் இன்பம்' என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

"இப்படி தமிழ் இலக்கியத்தில் உள்ள இன்பத்தை நுகர்வதற்கு மட்டுமல்ல நாம் இலக்கியம் பயில்வது! இலக்கியம், இன்பம் மட்டும் வழங்குவதல்ல!

"தமிழ் நாட்டின் அன்றைய நிலையை—சங்ககால நிலையை உணர்ந்து கொள்ளவும் நமக்கு உறுதுணையானதாகும், இலக்கியம்!

"அன்று அந்தநிலையில் வாழ்ந்த தமிழகம் இடைக்காலத்தில் எப்படி தாழ்ந்தது என்பதை அறிந்து கொண்டு, மீண்டும் நாம் சிறப்பான வாழ்வுபெற வழி என்ன என்பதைச் சிந்திக்கவும், சிந்தித்தபடி செயலாற்றத் தூண்டவும், உரமூட்டவும் நமக்கு இலக்கியங்கள் பயன்படுவதாகும்.

"பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கிற வாழ்வு முறையே இந்தக் காலத்திலும் வேண்டுமென நாம் கூறவில்லை; அந்த இலக்கியங்களை ஆராய்கிறோம். எவை எவை தேவையோ அவற்றை எல்லாம், அவற்றிலிருந்து எடுத்துக் கொள்கிறோம். பழமைக்கு வளையாமல், பகுத்தறிவுக்கு ஒட்டிய — இயற்கையோடு இயைந்த கருத்துக்களை எடுத்துக் கொள்ளுகிறோம்,"

என்று கூறி, தமிழ் இலக்கியங்களில் இடைக்காலத்தில் ஏற்பட்ட இடையீடு குறித்தும், பிற்கால இலக்கியங்கள் குறித்தும் பொதுச்செயலாளர் அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

"வேறெந்த மொழியில் உள்ள பெண் புலவர்களைவிட, தமிழ் நாட்டில்தான் அதிகமான பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள்; சங்ககாலத்தில் மட்டும் 40-45 பெண் புலவர்கள் இருந்ததாகக் கணக்கிடலாம்" என்றும் அவர் கூறி, தமிழ் நாட்டுப் புலவர்களின் சிறந்த ஆற்றலையும் அறிவையும் விளக்கிக் கூறினார்.

"சிறு பனித்துளியில் பெரும் பனைமரம் தெரிவதைப் போல, சிறு இலக்கியத்தில் பெரும் கருத்துக்களைக் காணமுடியும்" என்பதற்கும் விளக்கம் தந்தார், நெடுஞ்செழியன் அவர்கள்.

பின்னர், நமது வாழ்நாளில் சிறந்த கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் ஆகியோரது கவிதைகளில் சிறந்தவற்றை எடுத்துக் கூறி, அவை தரும் இன்பத்தை விளக்கினார், பொதுச்செயலாளர்.

---

'பிலேரியா' வியாதி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக இந்திய சர்க்கார் துணைச்சாதனங்கள் வகையிலும் இதர வகையிலும், 13 மாநிலங்களுக்கு இது வரையில் மொத்தம் சுமார் ரூ. 24,57,000 மானிய உதவியாக வழங்கியிருக்கின்றனர்.

# ஆந்திர காங்கிரசாரின் பதவி வேட்டை

## மேலிடம் நடவடிக்கை எடுக்குமாம்

நவம்பர் 1-ந் தேதி முதல் உருவாக்கப்படும் ஆந்திர பிரதேசத்தில் புதிய சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைமைக்கு பல காங்கிரஸ்காரர்கள் வேலை செய்துவருகின்றனர்; கோபாலரெட்டியைத் தலைவராக்க வேண்டும் என்று கையொப்பங்கள் பெற்றுவருகின்றனர்.

இந்தப் போக்கைக் கண்டித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலாளர் ஆந்திர காங்கிரஸ் தலைவர்களை — குறிப்பாகத் தோழர் ரெங்காவை தக்க சமாதானம் கூறுமாறு கேட்டுள்ளார்.

ஆந்திராவில் இப்படி பதவிக்காக காங்கிரஸ்காரர்கள் மோகம் கொண்டுள்ளதை உடனடியாக நிறுத்த அ. இ. கா. க. தக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

# சென்னை சர்க்காரின் தாராளம்!

கோவைப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் சென்னை முதலமைச்சர் காமராசர், 'ஆச்சாரியா வினோபா பாவேயின் பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை சர்க்கார், கீழ் பவானி பகுதியைச் சேர்ந்த 1,000 ஏகர் நிலத்தை 'பூமிதான'மாகத் தந்திருக்கின்றனர்' என்று தெரிவித்திருக்கிறார்.

[குறிப்பு:—வினோபா பாவே அவர்கள் தமிழ் நாட்டில் பூமிதானம் கோரி சுற்றுப்பயணம் செய்து வருவது தோழர்கள் அறிந்ததே அவருக்கு இப்போது சென்னை சர்க்கார் பிறந்த நாள் அன்பளிப்பாக ஆயிரம் ஏக்கர் நிலம் தந்திருக்கின்றனர்; ஆனால், நிதியமைச்சர் சுப்பிரமணியம் சில கிழமைகளுக்கு முன், தமிழ் நாட்டில் பூமிதானம் செய்யப்படும் நிலங்களில் பள்ளிகள் கட்டுவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் 10 ஏகர் நிலம் தர வேண்டுமென வினோபா பாவே அவர்களைக் கேட்டுககொண்டது குறிப்பிடத்தக்கது] (ஆ-ர்.)

---

1954-ல் இந்தியாவில் மொத்தம் 52,26,005 சைக்கிள் டையர்கள் உற்பத்தி செய்யப்பட்டன; 1955-ல் அதன் உற்பத்தி 57,48,100 ஆக உயர்ந்துவிட்டது.

# விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வி

## ஆங்கிலமின்றிப் பெற முடியாததாகும்

### பண்டித நேரு மீண்டும் விளக்குகிறார்

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவைபோன்ற துறைகளில் உயர் ரகப் பயிற்சி, இன்னும் சில ஆண்டுக் காலத்திற்காயினும் அயல் மொழி ஒன்றின்மூலம் அல்லாமல் கிடைக்கப்பெறுதென்பது திண்ணம். இதனாலும், மற்றும் சில காரணங்களாலுமே, ஆங்கில மொழியை இரண்டாவது மொழியாகத் தேவையான அளவுக்கு—பெரும் அளவுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம் என்று எனக்குப் படுகிறது. நான் ஏன் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கருதுகிறேனென்றால் அதுதான் நம் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய இலகுவான மொழியாகவும், மிக முக்கியமான மொழியாகவும் இருக்கிறது என்பதுதான்; ஆனால், ஆங்கிலம் மட்டுமல்லாமல் மற்றுமுள்ள அயல் நாட்டு மொழிகளையும்கூட நாம் கற்கவேண்டும்.

"நாம் மிகக் குறுகிய மனப்பான்மையுடையவர்களாக—கிணற்றுத் தவளைகளாகவே இருக்கிறோம். நாம் இப்படியே இருந்துவந்தால் மற்ற உலக நாடுகளின் தொடர்பிலிருந்து நாம் துண்டிக்கப்பட்டு, நம்முடைய 'சிறிய இந்தியா' என்ற உலகில் மட்டுமே வாழவேண்டிய ஒரு அபாயம் நம்மை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவேனும் நாம் பிறநாட்டு மொழிகளுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளவேண்டிய அவசியத்திலிருக்கிறோம்."

அண்மையில் நடைபெற்றக கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் போது பண்டித நேரு ஆற்றிய சொற்பொழிவின் சாரம் குறித்துத் தமக்கு விளக்கம் தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்ட போது, அவர், ஆங்கிலம், இந்தி, வட்டாரமொழிகள் ஆகியவற்றின் எதிர்கால முக்கியத்துவம் குறித்து எழுதியுள்ள கடிதத்தின் ஒரு பகுதியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மொத்தத்தில் பார்க்கப் போனால், நமது பள்ளிகளில் ஆங்கில மொழி இரண்டாந்தர கட்டாய மொழியாக இருக்கவேண்டியது அவசியம் எனக் கருதுகிறேன். பள்ளிகளில், தெரிந்துகொள்ள வேண்டிய அளவிற்குச் சிறிது அடிப்படைப் பயிற்சி தரப்படலாம். ஆனால், அதன்பிறகு சிறு தொகையினரே ஆங்கில மொழி குறித்துத் தெளிவான முறையில் பயிற்சி பெறுவர். இந்நிலையில் பல்கலைக் கழகங்களிலிருந்து ஆங்கிலத்தை நீக்கிவிடுவதானது இயலாத ஒன்றாகும். பல்கலைக் கழகங்கள், விசேடமான பயிற்சிகள் தரப்படுவதற்கென உள்ளவைகள். அவை ஆரம்ப காலப் பயிற்சி தருவதற்காக ஏற்பட்டவை அல்ல.

"பள்ளிகளைப் பொறுத்தவரையில் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைப் பாடங்கள் இந்தி மொழியிலோ, வட்டார மொழியிலோ போதிக்கப்படுவதையும் நான் வரவேற்கிறேன். அத்துறைப் பாடங்களில் வரும் தொழில் நுணுக்க வார்த்தைகள் அனைத்தும் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளிலும், பொதுவாகவும் அகில உலகிலும் உபயோகிக்கப்படும் வார்த்தைகளுக்கும் ஒருமைப்பாடு உடையனவாகவே இருக்கும் எனவும் நான் நம்புகிறேன். அப்படியில்லாவிட்டால் அது மாணவர்களுக்குப் பெருங் குழப்பத்தையும் பளுவையும் உருவாக்கிவிடும்."

இவ்வாறு கூறியுள்ள அவர், மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"இந்தியாவின் வருங்காலத்தில் ஆங்கில மொழிதான் போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பதை ஒப்பமுடியாது. பள்ளிப் போதனா மொழியாக இந்தியோ, அந்தந்த வட்டார மொழியோதான் இருக்கமுடியும்.

"இந்தியாவின் அபிவிருத்தி, முன்னேற்றம் ஆகியவை எல்லாம், நம்முடைய சொந்த மொழிகளின் மூலமேதான் சாத்தியப்படுமேயன்றி அந்நிய மொழிகளால் முடியாது.

"இந்தி மொழியைப் பொறுத்தவரையில், அம்மொழி கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் தேவையான ஆதரவு தரப்பட வேண்டுமென விரும்புகிறேன்"

# 'சுபாஷ்போஸ் இறந்தது உண்மையே'

### விசாரணைக் குழு அறிக்கை—மக்கள் சபையில் தாக்கல்

"என்னுடைய நாட்டின் விடுதலைக்காக நான் கடைசி வரையில் போராடிக்கொண்டிருந்தேன் என்பதை மக்களிடம் சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இந்தியா வெகு சீக்கிரத்திலேயே சுதந்திரம் அடைந்துவிடும் என்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்தியாவை இப்போது எவரும் அடிமைத் தளையில் வைத்திருக்க முடியாது."

தன்னுடைய உயிர் பிரியும் தருவாயில் சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் கடைசியாகக் கூறின வார்த்தைகள் இவை என்று, சுபாஷ் போஸ் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பது குறித்து விசாரணை செய்து அறிக்கை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட விசாரணைக் குழு அறிவித்திருக்கிறது.

இதன் மூலம் சுபாஷ்சந்திர போஸ் இறந்துவிட்டார் என்பது உறுதி செய்யப்படுகிறது என்று அந்த விசாரணைக் குழு அறிக்கை கூறுகிறது.

அந்த விசாரணைக் குழு தந்த அறிக்கையைப் பண்டித நேரு மக்கள் சபையிலும் மாநிலங்கள் சபையிலும் தாக்கல் செய்திருக்கிறாராம்

கடந்த உலக யுத்தத்தின்போது ஜப்பானின் தோல்வி தவிர்க்க முடியாததாகத் தோன்றிய கடைசி நேரத்தில், சுபாஷ்போஸ், தன்னுடைய போராட்டத்தை தென் கிழக்கு ஆசியாவிலிருந்து மஞ்சூரியா மார்க்கமாக ரஷ்யாவுக்கு மாற்றிக் கொள்ளுவதற்குத் தயாராக இருந்ததாக விசாரணைக் குழு அறிக்கை கருதுகிறது.

போஸ் அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் சொத்துக்கள் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லையாம்;

(1-ம் கலம் பார்க்க)

# விலைவாசிகள் ஏற்றத்திற்கு காரணம் என்ன?

## ரிசர்வ் பாங்க் அறிக்கை தரும் விளக்கம்

"இவ்வாண்டில் தொடர்ந்து விலைவாசிகள் ஏறிக்கொண்டே சென்றுள்ளன; அதாவது, 167 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டுள்ளது; ஆனால். சென்ற ஆண்டில் விலைகள் 10 சதவிகிதம் குறைந்திருந்தது; இவ்வாண்டில் ஏற்பட்ட விலைவாசிகள் ஒருமுகமாகவே பொதுத் தன்மையில் இல்லை,"

என்று, இந்த ஆண்டு பொருளாதார நிலைபற்றி, ரிசர்வ் பாங்கி வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கை கூறுகிறது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :—

"அநேகமாக விவசாயப் பொருள்களின் விலைகள் மட்டும் உயர்ந்திருக்கின்றன. ஆனால், தொழிற்சாலைகளின் மூலம் உற்பத்தியாகிற பொருள்களின் விலைகள் நிலையாகவே இருந்தன.

"சென்ற ஆண்டில் விவசாயப் பொருள்களின் விலைகள் குறைந்திருந்தன; ஆகவே, அந்தச் சரிவைச் சரிக்கட்டுகிற வழியில் இவ்வாண்டில் விவசாயப் பொருள்களின் விலைகள் உயர்ந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. எப்படியானாலும் விவசாயப் பொருள்களின் விலைகள் ஏற்றத்திற்கு உணவு உற்பத்தி அளவு குறைந்திருப்பதே முக்கியக் காரணமாகும்.

"அதோடு, பெரிய அளவில் சில கச்சாப் பொருள்களின் ஏற்றுமதியானது, தேவை அதிகரித்ததும் விலைவாசிகள் உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. நீண்ட கால வாய்ப்புகளைப் பொறுத்தவரையில், வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யும் தொகை அதிகரித்து வருவதை ஓரளவு பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் சமாளித்தாலும்கூட, இதனால் விலைவாசிகள் ஏறிக்கொண்டேபோனாலும் போகலாம். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு விவசாய, தொழிற்சாலை உற்பத்தி அளவு உயரவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

"ரிசர்வ் பாங்கியில் மாநில அரசாங்கங்கள் போட்டுள்ள பணத்தைத் தவிர பொது மக்களிடம் பணப் புழக்கம் ரூ. 214 கோடி அதிகரித்திருக்கிறது; அதாவது, மொத்தத்தில் ரூ. 2191 கோடி பணப் புழக்கம் அதிகரித்திருக்கிறது.

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூபாய் நோட்டுப் புழக்கம் அதிகரித்ததற்கு அரசாங்கத்தின் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமும், பாங்கிகள் அளிக்கிற கடன் வசதிகள் அதிகரித்திருப்பதும் முக்கிய காரணமாகும்.

"நெல், அரிசி போன்ற சரக்குகளை ஈடாக வைத்துக்கொண்டு பாங்கிகள் கடன் அளிப்பது முறையற்றதன்மையில் அதிகரித்துவிட்டதென்பது பாங்கிகள் அனுப்பிய மாதாந்தரச் சுற்றறிக்கையிலிருந்து தெரியவந்தது."

# சுபாஷ் போஸ்...

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

விசாரணைக் குழுவிற்குக் கிடைத்த சாட்சியங்களிலிருந்து அந்தச் சொத்துக்கள் சம்பந்தமாக எத்தகைய இறுதியான முடிவுக்கும் குழு வரவில்லை.

விசாரணைக் குழுவின் அறிக்கையை இரு சபைகளிலும் சமர்ப்பித்த பண்டித நேரு சொன்னார்:—

"போசின் உடலை எரித்த சாம்பல் (அஸ்தி) ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலுள்ள ஒரு கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறது; அதனை இந்தியாவுக்குக் கொண்டு வந்து தக்க நினைவுச் சின்னம் எழுப்பும்படி விசாரணைக் குழு சிபாரிசு செய்திருக்கிறது; இந்தச் சிபாரிசுமீது சர்க்கார், இந்தக் கட்டத்தில் எவ்வித முயற்சியும் எடுப்பதற்குத் தயாராக இல்லை; இப்பிரச்சினையில், சுபாஷ் போஸ் குடும்பத்தினருக்கு அதிக சம்பந்தமிருப்பதால் அவர்களைக் கலந்து கொண்டுதான் இந்தச் சிபாரிசை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்."

# செய்திச் சுருள்

★

### சென்னை தொழில் கல்லூரிகள் மாணவர் தமிழ் மன்ற அமைப்பு

சென்னையிலுள்ள தொழில் கல்லூரிகளால் அமைக்கப்பட்ட மேற்படி மன்ற அமைப்புக் கூட்டமும், நிர்வாகிகள் தேர்வும் 8—9—56-ல், சென்னை சட்டக் கல்லூரியில் நடைபெற்றது. தலைவர்: க. வே. கசபதி; துணைத் தலைவர்: எஸ். மீனாம்பாள்; பொதுச் செயலாளர்கள்: மு. சே. திவான் முத்து முகமது, அ. அப்துல் ரசாக்; பொருளாளர்: யு. கே. ஆறுமுகம்; ஆண்டு மலர்க்குழுவினர்: ஆசிரியர்: ப. வரதராசுலு; துணை ஆசிரியர்: என். லீலாவதி; செயலாளர்: கோ. பட்டாபிராம்; துணைச் செயலாளர்: ந. தி. நல்லப்பன்; ஆண்டு விழாக் குழுச் செயலாளர்: சின்னசாமி; துணைச் செயலாளர்: பொ. முத்தையா.

### பி. அண்டு. சி. ஆலை தி. மு. கழகத் தொழிலாளர் கூட்டம்

2—9—56 காலை 10 மணிக்கு, சென்னை—குயப்பேட்டை கந்தசாமி கோயில் தெரு, எண் 50 இல்லத்தில் தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமையில் மேற்படி ஆலை தி. மு. கழகத் தொழிலாளர்களின் 'தி. மு கழகத் தேர்தல் நிதி' ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நிதிக் குழுச் செயலாளராக கே. சுப்பிரமணி; துணைச் செயலாளர்களாக க. வரதன், பி. வெங்கடாசலம்; பொருளாளராக சி. எல்லப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயற் குழு உறுப்பினர்களாக 16 தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் மேற்கொண்டு செயற்குழுவை விரிவாக்கச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

### சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

#### சொற்பொழிவுக் கூட்டம்

11—9—56 மாலை 6-30 மணியளவில் ஒய். எம். சி. ஏ, எஸ்பிளனேடு கட்டிடத்தில் திரு பி. என். குருசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 'தமிழ்த் திருமணம்' என்ற தலைப்பில் தோழியர் ஜே. கலைச்செல்வி விளக்கவுரையாற்றினார். அடுத்துத் தோழர்கள் சி. ஜி சிவராசு, ஏ. சுப்பிரமணியம், சாமிசிதம்பரனார், கே. எஸ். சுவாமிநாதன், ம. செல்வராசன், சிட்டிபாபு ஆகியோர் சங்க இலக்கியச் சான்றுகளோடு தமிழ்த் திருமணத்தை ஆதரித்துச் சொற்பொழிவாற்றினர்.

### அறிவு வளர்ச்சி மன்றப் பணிமனை திறப்பு

9—9—56 காலை 10 மணியளவில், பெங்களூரைச் சேர்ந்த அலசூரில், மேற்படி மன்றப் பணிமனை திறப்பு விழா (13, பழநிமுதலியார் வீதி), தோழர் கே. அருள்நாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் தி. மு குலசேகரன் மன்ற நோக்கத்தை விளக்கினார். பின்னர் தோழர்கள் அ. மு. கண்ணன், மு. ந. மூர்த்தி, வே. வேலரசு ஆகியோர் மன்ற அமைப்பு முறை குறித்தும், அறிவுப் பணியின் அவசியத்தை உணர்த்தியும் பேசினர்.

### வேலூர் அழகிரி படிப்பக அமைப்பு

9—9—56 இரவு 9 மணிக்கு, தோழர் எஸ். கே. கணேசன் இல்லத்தில், தோழர் வி. எம். பச்சயப்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பக அமைப்புக் கூட்டத்தில், தோழர் வி. எம். பச்சயப்பனைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 23—9—56-ல் படிப்பகத் திறப்பு விழா நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### சிதம்பரம் திரு. வி. க. படிப்பகம்

7—9—56 இரவு 10 மணியளவில் திரு. பா. சுப்பையன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், படிப்பக ஆண்டு வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயலாளர் தோழர் சி பி. பாண்டியன் நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தோழர் பா. சுப்பையனைத் தலைவராகக் கொண்ட புதிய செயற்குழு அமைக்கப்பட்டது; தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### சென்னை அறிவு இயக்க மன்றப் பொதுக்கூட்டம்

10—9—56 மாலை, மேற்படி மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் செ. கதிரவன் தலைமையில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மதுரை எஸ். முத்து, மாணிக்கம் ஆகியோர், 'அறிவியக்கம்,' 'சமூகம்' ஆகியவை பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

### இலக்கியச் சொற்பொழிவு

9—9—56 காலை 10 மணிக்கு, சென்னை-இராயபுரம் பனைமரத் தொட்டி அட்டபாளையம் பஜனை கோவிலில் திரு. எஸ். இராசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டத்தில், தோழர் ம. இளஞ்செழியன் 'நான் கண்ட வள்ளுவர்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

### இரவுப் பள்ளி திறப்பு

குணியமுத்தூர் பாதை சுண்ணாம்புக்காளவாய் பகுதி வ. உ. சிதம்பரனார் கலை இல்லத்தின் இரவுப் பள்ளித் திறப்பு விழா நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் தலைமையில், 9—9—56 மாலை 5 மணியளவில் நடைபெற்றது. தோழர் 'கோவை குமார்' பள்ளியைத் திறந்துவைத்தார். தோழர் தங்கமாணிக்கம் வ. உ. சிதம்பரனார் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். தோழர்கள் மா. இராமசாமி, மா. வேலாயுதம், தமிழன்பன் ஆகியோர் வ. உ. சி. பற்றிக் கருத்துரை வழங்கினர்.

### வேண்டுகோள்

6—9—56 (வெளியூர் 7-9-56) 'நம் நாடு' இதழில், 4-வது பக்கத்தில், 'கோவை மாவட்ட தி. மு. கழக எழுத்தாளர்கட்கு,' என்ற தலைப்பில் காணப் பெறும் செய்தியில், தோழர் தங்கமாணிக்கம் அவர்களின் முகவரி விட்டுப் போயிருக்கிறது—'கலைக் கோயில்' கிளை அலுவலகம், குணியமுத்தூர், கோவை' என்ற முகவரியையும் அச்செய்தியுடன் சேர்த்துக்கொள்ளவும். எழுத்தாளர் கிளையின் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி சேர்க்கவும் ஆவன செய்யப்பட்டு வருவதாக அவர் அறிவித்திருக்கிறார். (ஆ-ர்)

### திருமணம்

9—9—56 காலை 9 மணியளவில், புதுவையை அடுத்த தேங்காய்த்திட்டில், அவ்வூர் தி மு. க. துணைச் செயலாளர் தோழர் நா. சடகோபன்—தோழியர் நாகபூஷணம் திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புலவர் வீர அரங்கனார், எ. கோவிந்தசாமி எம். எல். ஏ, அ. பொன்னம்பலனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கும், புதுவைத் தி மு. க. வளர்ச்சிக்குமாக இரண்டிரண்டு ரூபாய் நன்கொடையாக அளிக்கப்பட்டது— 'நம் நாடு' இதழுக்குத் தரப்பட்ட நன்கொடை வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

# பாகிஸ்தான் புதிய பிரதமராக சுராவர்த்தி பதவி ஏற்றார்

## காஷ்மீருக்கு சுயநிர்ணய உரிமை பெறுவதாக உறுதி

கராச்சி, செப். 12—

பாகிஸ்தானின் புதிய பிரதமராக, அவாமி லீக் தலைவர் எச் எஸ். சுராவர்த்தி பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அவாமி லீக், குடியரசுக் கட்சி இவை இரண்டும் சேர்ந்த கூட்டு மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது.

குடியரசுக் கட்சியிலிருந்து 5 மந்திரிகளும் அவாமி லீகிலிருந்து பிரதமர் உட்பட நான்கு மந்திரிகளும் இருப்பர் என்றும், இன்றுதான் இந்தக் கூட்டமைப்புச் சாத்தியமாயிற்று என்றும் தெரியவருகிறது.

சௌத்திரி முகம்மது அலி கடந்த கிழமையில், தனது மந்திரி சபையை ராஜினாமாச் செய்ததும், பின்னர் கவர்னரால் மீண்டும் பதவி ஏற்க வருமாறு அழைக்கப்பட்ட போதிலும் அவர் மறுத்ததும் எதிர்க்கட்சியினரை இன்று ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கின்றன.

முகம்மது அலி பிரதமர் பதவியிலிருந்து மட்டுமின்றி, லீக் கட்சியிலிருந்தும் விலகிக்கொண்டிருக்கிறார் என்பது தெரிந்ததே.

சுராவர்த்தி, 1947ல் பாகிஸ்தான் அமைந்த பிறகு பதவியேற்றுள்ள 5-வது பிரதம மந்திரியாவார்.

பதவி ஏற்றதும் சுராவர்த்தி, 'காஷ்மீர் பிரச்சினைதான் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே உள்ள உறவுகளைக் கசப்பாக்கி வருகிறது. காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை பெற்றுத்தர வேண்டுமென்பது எங்களுடைய திடமான கொள்கை. இதில் நாங்கள் காஷ்மீர் மக்களைக் கைவிட்டுவிடமாட்டோம். நாங்கள் காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமெனக் கோருவதில் உள்ள நியாயத்தை, இந்திய சர்க்காரும் இந்தியாவின் உள்ள மக்களும் உணருவர் என்றே நான் நம்புகிறேன்' என்பதாக வானொலியில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

30 நிமிடங்கள் பேசிய சுராவர்த்தி, உள்நாட்டுப் பிரச்சினைகள் பலவற்றையும் குறிப்பிட்டுவிட்டு, இலஞ்ச ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளில் தனது சர்க்கார் உடனடியாக ஈடுபடும் என்றும் கூறியிருக்கிறார்.

# மீனவர் குடும்பங்கள் நல்வாழ்வுபெறும்?

## சென்னை அமைச்சர் தகவல்

திருநெல்வேலி, செப். 12—

மீனவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு கடலில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு 'பவளமாலை'கள் போன்ற பொருள்களை மீன் பிடிக்கும் தொழிலாளர் மனைவியர் தயாரித்து விற்க சிறிய குடிசைத் தொழில்கள் துவங்குவதற்கு சென்னை—மத்திய அரசாங்கங்கள் உத்தேசித்துள்ளனவாம்.

'வீடுகள் கட்டுவதற்காக இத்தொழிலாளர்களுக்குக் கடன்கள் அளிக்கவும், நல்ல குடி தண்ணீர் கிடைக்கவும், நைலான் மீன்வலைகள் விநியோகிக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ள திட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது," என்று, சென்னை மீன்துறை அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

# 12,000 எலிகள் பிடிபட்டனவாம்

எலிகளின் தொல்லையைத் தவிர்க்க, ஒரு எலியை உயிருடன் பிடித்தால் அரையணா தருவதாக சூரத் நகரசபை அறிவித்தது.

நான்தோறும் சிறுவர்கள் எலிகளைப் பிடித்துக்கொண்டு நகரசபைமுன் அணிவகுத்து நிற்கின்றனராம்.

சென்ற மாதம் 12,000 எலிகள் பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லியில் வெடிகுண்டு வீச்சு!

## வெளிநாட்டவர் வேலையா?

புதுடில்லி, செப். 11—

டில்லியில் சமீபகாலமாக நடைபெற்றுவரும் குண்டுவீச்சுச் சம்பவங்களில் வெளிநாட்டவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று நம்பஇடமிருப்பதாக, உள்நாட்டு விவகார மந்திரி பி. என். தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'ஆனால் இந்த நேரத்தில் மேலும் விபரங்கள் கூறுவதற்கில்லை' என்றும் அவர் கூறினாராம்.

# காஷ்மீர் பற்றி இந்தியாவிற்கு விரோதமான பிரச்சாரம்

## முன்னாள் காங்கிரஸ் செயலாளர் மேற்கொண்டிருக்கிறாரா?

புதுடில்லி, செப். 12—

காஷ்மீர் விவகாரத்தைப் பொறுத்து, இந்தியாவிற்கு விரோதமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிலருக்கு 'அன்னிய சக்திகள்' பண உதவி செய்வதாக வந்துள்ள தகவல் பற்றி சர்க்கார் விசாரணை நடத்திக்கொண்டிருப்பதாக உள்நாட்டிலாகா மந்திரி தத்தார் மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

டில்லியிலிருந்து சில நபர்கள், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவிற்கு விரோதமான துண்டு வெளியீடுகளைப் பிரசுரிப்பதாகவும், இது குறித்துக் காஷ்மீர் சர்க்கார், ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதாகவும் அந்த மந்திரி தகவல் தந்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பல உப கேள்விகள் எழுப்பப்பட்டனவாம். "காங்கிரசின் முன்னாள் செயலாளர் ஒருவரே இதுபோன்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறாரா? மற்றுமொருவர், சர்க்காரின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையில் இந்தப் பிரச்சாரத்தைச் செய்கிறாரா? சர்க்கார் மாளிகை ஒன்றே இதுபோன்ற பிரச்சாரத்திற்கு இடமளிக்கிறதா?"

என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டனவாம். மந்திரி இவற்றிற்கெல்லாம் மழுப்பலையே பதிலாகத் தந்திருக்கிறார்.

# வெள்ளையர்களின் நிறவெறிப் போக்கு!

டெக்சாஸ் நகரத்திலுள்ள டெக்சாகர்னா கல்லூரியில் படிக்கும் ஒரு நீக்ரோ மாணவரையும் மாணவியையும் 300 வெள்ளையர்கள் கொண்டதோர் கூட்டம் தடுத்து, கூச்சலிட்டுக் கற்களை எறிந்து காலித்தனம் செய்தனராம்!

மற்றும் கிளிண்டன் நகரத்தில் உள்ள பள்ளிக்கூடங்கள் அருகில் வெள்ளையர்கள், நீக்ரோக்களை தாக்கும் நிலைமையும் அமைதியின்மையும் வளர்ந்து வருகிறது.

## வடக்கே உருவாகியுள்ள அணைக்கட்டிலிருந்து நீர்

### 5,25,000 ஏகர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும்

இராகுட் பலநோக்கு அணைக்கட்டுத் திட்டத்திலிருந்து பாசனத்திற்கு நீர்விடப்பட்டுவிட்டது; இந்த ஆண்டில் சுமார் இலட்சம் ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும்.

கோடைகால அறுவடைகளுக்காக நாளாவட்டத்தில் 5,25,000 ஏகர் நிலத்திற்கு இந்த அணைக்கட்டிலிருந்து நீர்ப்பாசனம் கிடைக்கும்.

## ஒரிசாவின் புதிய கவர்னர் சச்சார் பதவி ஏற்றார்

கட்டாக், செப். 12—

ஒரிசாவின் புதிய கவர்னராக, பஞ்சாபின் முன்னாள் முதன் மந்திரியான பீம்சென் சச்சார் பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

குமாரசாமி ராசாவிற்குப் பிறகு இவர் இன்று ஒரிசா கவர்னராகியுள்ளார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1955-56-ம் ஆண்டில், உல்லாசப் பிரயாணிகள் போக்குவரத்தின் மூலம் இந்தியாவுக்கு அந்நிய நாணயச் செலாவணியாக மொத்தம் ரூ. 10 கோடி கிடைத்தது.

# இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஊழியருக்குப் போனஸ் இல்லையாம்

## புதிய சம்பள விகிதம் பற்றி மந்திரி விளக்கம்!

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன சிப்பந்திகளின் சம்பளம், போனஸ் ஆகிய விஷயங்களைக் குறித்து அந்நிறுவனத் தலைவர் பட்டேல் விளக்கம் தந்திருக்கிறார்.

நிறுவனத்தின் சம்பளப் பட்டியல் மாதம் ரூ. 31 இலட்சத்தில் இருந்து ரூ. 32½ இலட்சமாக உயர்த்தப்படுமாம்.

இனி சிப்பந்திகளுக்குப்போனஸ் தர நிறுவனம் சம்மதிக்கப் போவதில்லையாம். ஆனால், இதனால் ஏற்படக்கூடிய சிரமத்தைக் குறைப்பதற்காக, முதல் வருஷத்திய போனசில் 75 சத விகிதத்தை வழங்கி, மிகுதி 25 சத விகிதத்தை ஊழியர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் ஒரு நிதியில் சேர்க்க கார்ப்பரேஷன் முடிவு செய்துள்ளதாம். சுமார் 1,400 அதிகாரிகளுக்கு போனஸ் அளிக்கப் போவதில்லையாம்.

## 155 பதவிகளுக்கு 23,000 பேர் போட்டி!

அவசரகால ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு ஆஜராக 23,000 மனுக்களுக்கு மேல் வந்துள்ளதாகவும், அதற்கான பரீட்சை டிசம்பர் 28-ந் தேதி நடைபெறும் என்றும், தேறுவோரிலிருந்து சுமார் 155 பேர்களுக்கு நியமனம் அளிக்கப்படும் என்றும் உள்நாட்டு இலாகா அணை மந்திரி தத்தார் அறிவித்துள்ளார்.

## இரயில்வே ஊழியருக்கு எழுத்துரிமை!

இரயில்வே இலாகாவில் பணியாற்றுவோர் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதவும் வானொலியில் பேசவும் எந்தத் தடையும் இல்லை என்று இந்திய இரயில்வே மந்திரி அறிவித்துள்ளார்.

ஆனால், தங்களுடைய மேல் அதிகாரியிடமிருந்து இதற்கு முன் அனுமதி பெறவேண்டுமாம். அதோடு இரயில்வே சம்பந்தப்பட்ட விஷயங்களையே சாதாரணமாக எழுதவேண்டும் என்றும் கூறியுள்ளார் அவர்.

## 3,000 ஆண்டுகளுக்குமுன் இருந்த மாநகரம்!

புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் உஜ்ஜெயனி அருகில் நாகடா என்ற இடத்தில் தோண்டிப் பார்த்தபொழுது, அரண்சுவர்களுடன் கூடிய புராதன நகரத்தின் சின்னங்களைக் கண்டு பிடித்தனர். சுமார் 3,000 ஆண்டுகளுக்குமுன் உபயோகிக்கப்பட்ட, சித்திரங்கள் தீட்டப்பட்ட மண்பாண்டங்கள் அங்கு காணப்பட்டனவாம்.

## க. அன்பழகன்

### கோவை வருகை

தோழர் க. அன்பழகன் அவர்கள் 15—9—56 சனி மாலை கோவைக்கடுத்த போத்தனூர் தி. மு. கழகக் கூட்டத்திலும், 16—9—56 ஞாயிறு மாலை கோவை நகர் இராமநாதபுரம் தி. மு. கழகக் கிளையின் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்வார்.

## சென்னை - சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழக 8-வது ஆண்டு விழா

15—9—56 மாலை 6-மணிக்கு, வைத்தியநாத முதலி தெருவில், மேற்படி கழக 8-வது ஆண்டு விழா தோழர் வெ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்

தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசுவர்.

## நம்புவது எப்படி?

புதுடில்லி, செப். 12—

தற்காப்பிலாகாவில் ஆட்குறைப்பிற்கு டலியாகும் 6,000 தொழிலாளர்களுக்கு மாற்றுவேலை தேடித் தருவதற்கு சர்க்கார் எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று, மக்கள் சபையில் பண்டித நேரு, தற்காப்பிலாகா மந்திரி கட்ஜு ஆகியோர் உறுதிமொழி தந்திருக்கின்றனராம்

★

## 600 இன்ஷ்யூரன்ஸ் ஊழியர் ஆர்ப்பாட்டம்

சென்னை நகர இன்ஷ்யூரன்ஸ் சிப்பந்திகள் சுமார் 600 பேர் இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ரிசர்வ் பாங்கி சிப்பந்திகளுக்கு அளிக்கப்படும் முறையில் தங்களுக்கும் சம்பள விகிதம் அளிக்கப்பட வேண்டுமென்றும் 'சீனியாரி'ட்டிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றும், திறமை சோதனை விதி முறைகளை ஒழிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

# ஐதராபாத்தில் அபினி ஒழிப்பு!

1959 ஏப்ரல் முதல் ஐதராபாத் பகுதியில் அபினி ஒழிக்கப்படும் என்றும், தற்போது அதை உபயோகிப்பவர்கள் இந்தக் காலத்தில் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், உடனடியாக அவர்கள் டாக்டர்களின் சிபாரிசு பெற்றுத்தங்கள் பெயர்களைப்பதிவு செய்து கொள்ளும்படியும் ஐதராபாத் அரசாங்கம் அறிவித்துள்ளதாம்.

## வாழ்க்கை செலவுப் புள்ளி

இதுவரை தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமே வாழ்க்கைச் செலவுப்புள்ளி தயாரிக்கப்பட்டது. இனி விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்தப்புள்ளி தயாரித்து வெளியிடப்படும் எனத் தெரிகிறது.


*** *******-*-******

மகத்தான விருந்து

# 'திராவிடன்'

(ஆசிரியர் : என். வி. நடராசன்)

★

## விடுதலை வார சிறப்பிதழ்

இருவண்ண முகப்பு!
இனிய எழுத்தோவியங்கள்!
அதிக பக்கங்கள்!

இன்னும்பல சிறந்த அம்சங்கள்

விலை 4 அணா

★

14-7-56 அன்று வெளிவருகிறது

*-********-********


## திருச்சி நகர தி. மு. க.

செயற்குழு உறுப்பினர்கட்கு:

"திருச்சி நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 15—9—56 இரவு 9-மணிக்கு திருச்சி திராவிடப் பண்ணை மாடியில் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன். ஆய்வுக்கு வருபவை: திராவிடநாடு பிரிவினை நாள்; பொதுத்தேர்தல்; வரவு-செலவு; செயற்குழுவில் ஏற்பட்ட காலி இடத்திற்கு மறுதேர்தல்; கழக ஆக்கவேலைகள்"

என்று, திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ் மணி அறிவிக்கிறார்.

## தில்லை - வில்லாளன்

சுற்றுப்பயணம்

செப் 16 : ஆயிரம்விளக்கு
23 : குன்னியம்பாளையம்
25 : சிதம்பரம்

## க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

செப். 15 : போத்தனூர்
16 : இராமநாதபுரம் (கோவை)
17 : வரகனேரி (திருச்சி நகரம்)

## துர்நாற்றத்தை ஒழிக்க!

சென்னை நகரில் ஓடும் கூவம் நதியில் சாக்கடைத் தண்ணீர் விழுவதைத் தடுப்பதற்குத் திட்டம் வகுக்க வேண்டுமென நகரசபையை சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

## ரூ. 300 பறிகொடுத்த பஞ்சாப் மந்திரி

பஞ்சாப் விவசாய மந்திரி குர்பான்சிங், சென்னை சர்க்கார் விருந்தினர் மாளிகையிலிருந்து நகரசபை மிருகக் காட்சிசாலைக்குச் செல்லும்போது ரூ. 300 அடங்கிய அவரது பர்ஸ்' ஜேப்படி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## ஜவுளி பயிற்சிக் கழகம்

சென்னை—வண்ணாரப்பேட்டையிலுள்ள ஜவுளி பயிற்சிக் கழகத்தை டில்லி சர்க்கார் எடுத்துக்கொண்டு, அதை சேலத்தில் அமைக்கப்போவதாகத் தெரிகிறது. தற்போது நடைபெறும் வேலைகளுடன் உற்பத்தியில் அபிவிருத்தி நுட்பங்கள், நெசவில் திறமையை அதிகப்படுத்தப்போதிய ஆராய்ச்சி இவை எல்லாம் இக்கழகத்தில் மேற்கொள்ளப்படுமென்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.